# அரையர் சேவை – வைணவ சம்பிரதாய வழிபாட்டில் ஒரு நாட்டிய மரபு

முனைவர்.மு.சுப்பையா #1, சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ் *2

[1] *உதவிப் பேராசிரியர், நிகழ்கலைத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி*
[2] *முனைவர் பட்ட ஆய்வாளர், நிகழ்கலைத்துறை புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி*

வைணவ சமயப் பாரம்பரியத் திருவிழாக்காலங்களில் போது வைணவக் கேயில்களில் அல்லது விண்ணகரங்களில் நிகழ்த்தப்படும் பாரம்பரிய உபசாரங்களில் ஒன்று அரையர் சேவை. அரையர் சேவை என்றால் என்ன?, இவ்வழிபாட்டு மரபை யார் முதலில் தொடக்கி வைத்தது?, அதன் அழகியல் அம்சம் என்ன?, இந்திய அழகியலில் அதன் அபிநயம் எவ்வாறானது?, என்பது பற்றிய விளக்கங்களை தெளிவுபடுத்தும் நோக்கமாக இக்குறிப்புரை அமைகின்றது.

இந்து மதம் என்னும் பெரும் பரப்பில் வைணவப் பாரம்பரியம் தனிச்சிறப்பு வாய்ந்தது. சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் என்று ஆறு பிரிவுகளிலும் சைவ, வைணவ மதங்கள் பெரும் செல்வாக்கை தமிழகத்தில் ஏற்படுத்தியே வளர்ந்து வந்துள்ளன. சைவத்திற்குள் பல்வேறு பிரிவுகள் இருப்பது போல் வைணவத்திற்கும் வடகலை, தென்கலை என்ற பிரிவுகள் காணப்படுகின்றது.

தமிழ் நாட்டை சைவ சமயத்தைப் பின்பற்றிய அரசர்கள் ஆண்டு வந்ததனால் சிவ உபாசனைகளில் அவர்கள் கவனம் செலுத்தினர். அதனால் இறை ஆராதணைகளில் இறைவன் முன் நிருத்திய உபசாரத்திற்காக நித்திய சுமங்கலிகளையும், தேவாரம் பாடுவதற்கு ஓதுவார்களையும் வேதனம் கொடுத்து திருப்பணிக்காக வைத்திருதார்கள், அரசர்கள். இறைவணை அர்ச்சணை செய்யும் வேளைகளில் இறையாரத்தியைத் தொடர்ந்து தேவாரம் பாடி நர்த்தன வழிபாடு இடம்பெறும். திருவிழாக்காலங்களில் சுவாமி வீதி உலாவரும்போது நவசந்திகளிலும் நர்த்தன ஆராதனை இடம் பெறும். இம்மரபு சிவன் கோயிலை மையமாகக் கொண்டு வளர்ந்து வந்து, இன்று பரத நாட்டியம் என்று கொள்ளுகின்ற தேவதாசி ஆடல் மரபைக் காணுகின்றோம். இம்மரபு பல்லவ காலத்தின் பின்தான் தெளிவான ஆதாரத்துடன் பார்க்க கூடியதாக இருந்துள்ளது. மகேந்திர பல்லவன், ராஜராஜ சேழான், ராஜேந்திர சேழன் என்போர்கள் கட்டிய கோயில் கட்டடக்கலை அம்சங்களிலும் கல்வெட்டுக்களிலும் அறிந்த கொள்ளலாம். இறைவனுக்கு முன் நின்று இறை அர்ச்சனையுடன் நிருத்த ஆராதனையும் சிவன் கோயில்களில் மட்டுமல்ல வைணவ விண்ணகரங்கிளிலும் நடைபெற்று வந்துள்ளது. இது ஆழ்வார்களின் பின்னர் அறிய முடிகின்றது.

## 1. அரையர் சேவை

திருமாலின் பக்தியில் ஆழ்ந்த ஆழ்வார்கள், திருமாலைப் பற்றிய பாசுரங்களைப் பாடியுள்ளனர். திருமால் சன்னிதி முன்வந்து நின்று பாசுரங்களை இராகத்துடன் பாடி, அப்பாசுரத்திற்கான கை அபிநயம் பிடித்து, அதற்கான பொழிப்பிணையும் கூறுகின்ற மரபு ஆழ்வார்களின் பின்னர் வைண சம்பிரதாயத்தில் தோன்றுகின்றது. இச்சம்பிரதாய சடங்கியல் மரபினை அரையர் சேவை என்று குறிப்பிடுவார்கள். இந்தியப் பாரம்பரியத்தில் கோயில் சார்ந்தே பல ஆடல் கலைகள் வளர்ந்து வந்தன. கதகளி, கூடியாட்டம், கிருஷ்ணாட்டம், பரதநாட்டியம், கைசிக புராண நாடகம் என்ற வகையில் அரையர் சேவையும் தனித்தன்மை வாய்ந்த நாட்டிய உபசார மரபாகும். இன்னும் அதற்கான சம்பிரதாயங்களுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற கோயில் கலை. ‘அரையர் சேவை’ என்பது இலக்கண மரபில் ஒரு பெயர்ச்சொல். அப்பெயர் புனிதத் தன்மை வாய்ந்தாக கருதப்படுகின்றது. “அரையர்” என்ற சொல் திவ்யப்ரபந்தத்தை விண்ணப்பம் செய்பவர்கள் (அறைபவர்கள்) என்று பொருள்படும். நாலாயிர திவ்யப்ரபந்த தீஞ்சுவை பாசுரங்களை பெருமாள் சன்னிதியில் அபிநயத்துடன் தாள, ஒலிக்கேற்ப ஆடிப்பாடிக் கொண்டாடுவதால் அவர்களுடைய சேவை அரையர் சேவை எனப்பட்டது.

## 2. அரங்கியல் தன்மை

அரையர்சேவை, திருக்கோயில் உற்சவர் முன் நடைபெறும். அரையரின் இரு பக்கங்களிலும் பார்வையாளர்கள் அமர்ந்திருப்பர். இவ்வமைப்பு நாட்டுப்புற அரங்க அமைப்புப் போல் இருக்கும். இங்கு பெருமாள் சன்னிதி அரங்கியல் தன்மையைப் பெறுகின்றது. அரங்கில் பார்வையாளர்களாக இருப்பவர்கள்-பெருமாள் சன்னிதியில் பக்தர்களாகவும், அரங்கில் நிகழ்த்துபவர்கள்-இச்சன்னிதியில் பெருமாளுக்கு கைங்கரியம் செய்பவர்களாகின்றார்கள். அரங்கியல் தன்மையில் இச்சடங்கைப் பார்க்கும் போது- அரையர் - நிகழ்த்துபவர்களாகவும், பக்தர்கள் பார்வையாளராகவும், இறை சன்னிதி - அரங்கத் தளமாகவும் மாற்றமுறுகின்றது. அரங்கின் அடிப்படையே நடிகன், பார்வையாளன், தளம் என்பதாகும். இங்கு பக்திபாவம் வெளிப்படும் வகையில் இச்சேவை அறையப்படும். இவ்வேளையில் ஆலயமே அரங்கமாக மாறுகின்றதன்மை அவதானிக்கலாம். ஆழ்வார்களின் பாசுரங்களை திராவிட வேதம் என்று குறிப்பிடுவர். இத்திரா விட வேதத்தை வைணவ விண்ணகரத்தில் பாடும் இறை தொண்டர்களாக இருப்பவர்கள் அனைவரும் ஆடவரே. சைவத்தைப் பொருத்தவரை நித்திய சுமங்கலியின் சேவையை வைணவத்தில் அரையர் மேற் கொள்கின்றனர் என்று குறிப்பிடலாம். சைவத்தில் பெண்கள், வைணவத்தில் ஆடவர்கள் இதுவே வித்தியாசம்.

## 3. வரலாறு

திருவரங்கம் கோயிலில் உற்சவரின் முன் ஒரு திருக்கார்த்திகைத்திருவிழாவின் போது திருமங்கையாழ்வார் தம்முடைய திருநெடுந்தாண்டகப் பாசுரங்களைப் பண்ணுடன் பாடி அபிநயித்தார் என அறியமுடிகிறது. இத்தகவலின் படி திருமங்கையாழ்வார் காலத்திலேயே திவ்வியப் பிரபந்தங்களைத் திருக்கோயில்களில் பாடும் மரபு உருவாயிற்று. இவர் காலத்திற்குப் பிறகு நாலாயிர திவ்யப்ரபந்தப்பாடல்கள் வைணவத் தலங்களில் இசைப்பது நின்றுவிட்டது. பின்னர் அந்த ஏடுகள் காணாமல் போய்விட்டன. இதனைக் கண்டெடுத்தவர் நாதமுனிகள். அவர் ஒரு இசை வல்லுனர். அப்பாடல்களுக்கு பண், தாளம் ஆகியன அமைத்து வகைப்படுத்தியவர். மேலை

அகத்து ஆழ்வான் மற்றும் கீழை அகத்து ஆழ்வான் எனும் தன்னுடைய இரண்டு மருமகன்களுக்கும் நாதமுனிகள் நாலாயிர பிரபந்தங்களைப் பண் மற்றும் தாளத்துடன் கற்பித்ததாக கூறப்படுகின்றது. இவர்கள் பிரபந்தப் பாடல்களை பெருமாள் வீதிவலம் வரும் பொழுது பாடினர். இவர்களுக்குப் பின் ஆளவந்தாரின் மகனான "திருவரங்கத்துப் பெருமாள் அரையர்" என்பவர் இத்துடன் நடனத்தையும் சேர்த்து இதனை வளர்த்தார். இந்தப் பரம்பரையினர் அரையர் எனப்படுகின்றனர். இவர்கள் வழி வந்தவர்களும் இவர்களிடம் கற்றவர்களுமே இன்று தமிழகமெங்கும் உள்ள அரையர்கள் என நம்பப்படுகிறது. முதன் முதலில் இச்சேவை திருவரங்கத்தில் துவக்கப்பட்டது. இம்மரபை ராமானுஜர் செம்மைப்படுத்தி அனைத்துக் விண்ணகரங்களிலும் பின்பற்ற முயற்சிகள் மேற்கொண்டார். அரையர் என்பவர் கோயில் மூலவருக்கான பலவித சேவையில் தினசரி ஈடுபட்டாலும் நாதமுனிகள் ஏற்பாட்டுக்கிணங்க பொங்கல், பங்குனி உத்திரம், திருவாடிப் பூரம் உள்ளிட்ட திருவத்யயன உற்சவங்களில் இறைமுன் அரையர் சேவை செய்வதை கட்டாயமாக்கியுள்ளனர்.

## 4. உடை ஒப்பனை

அரையர்கள் ஆடுவதற்கென்று பெரிய மேடை கிடையாது. அலங்கார ஆடைகள் கிடையாது. பெருமாள் முன்பு, வெறும் தரையில், குறைந்த வெளிச்சத்தில் பிரபந்தப் பாடல்களைப் பாடி நடிப்பது இவர்களது வேலை. திருக்கோயில் உற்சவர் முன் நடைபெறும் அரையர் சேவையின் போது அரையர்கள் பஞ்சகச்சம் அணிந்து, அரையர் குல்லாய் எனப்படும் கூம்பு வடிவத் தொப்பியும் இறைவனுக்குச் சாத்தப்பட்ட மாலையோடு வழக்கமான வைணவ சின்னங்களையும் அணிந்திருப்பர். இவர்கள் அணிந்து கொள்ளும் குல்லாய் சற்று வினோதமானது. இது வெல்வெட் துணியால் ஆனது. ஓரடி உயரமுள்ளது. அதன் மேல் பகுதியில் கலச வடிவிலான பித்தளை குமிழ்கள் இருக்கும். முன்புறம் தென்கலை திருமண் காப்பும், சங்கு, சக்கரமும் இருக்கும். இதனை அரையர்கள் மட்டுமே அணிவர். காதுகளை மறைக்கும் வகையில் இரண்டு பட்டைகள் தொங்கும். குல்லாய் முழுவதும் சரிகை வேலைப்பாடுடன் அமைந்திருக்கும்.

## 5. வைணவ சம்பிரதாயங்கள் - நிகழ்த்துமுறை

வைணவக் கோயில்கள்(108 திருப்பதிகளில் மட்டும்) மார்கழி மாதம் சிறப்பான உற்சவம் உண்டு. இதற்கு பகல் பத்து, இராப் பத்து என்று பெயர். மார்கழி மாதம் வளர்பிறை முதல் நாள் தொடங்கி பத்து நாள் இராப் பத்து நடைபெறுகிறது. இந்த நாள்களில் அரையர் ஆட்டம் இடம் பெறுகிறது. பெருமாள் முன்பு அரையர்கள் தாளத்துடன் பிரபந்தப் பாடல்களைப் பாடி அபிநயம் பிடிப்பர். பெருமாளின் அனுமதி பெற்ற பின்னரே இது தொடங்கும். இந்த அனுமதிக்கு 'அருளப்பாடு' என்று பெயர். இது கிடைத்தவுடன் அரையர்கள் "நாயிந்தே" என்று கூறி ஆட்டத்தினைத் தொடங்குவர். இந்த ஆட்டம் மூன்று பகுதிகளாக உள்ளது. முதலில் திருமாலின் புகழ் பாடுவது. இதற்கு "கொண்டாட்டம்" என்று பெயர். இதன் பிறகு அன்றைக்குரிய பாசுரங்களைப் பாடி அபிநயம் பிடிக்கும் நிகழ்ச்சி இடம்பெறுகிறது - இது இரண்டாவது பகுதி. இதன் பிறகு விளக்கம் சொல்லும் (வியாக்கியானம்) நிகழ்ச்சி இடம் பெறுகிறது - இது பகுதி மூன்று. ஒரு அரையர் வியாக்கியானத்தினைக் கூற, மற்றொருவர் ஏட்டைக் கையில் வைத்துக் கொண்டு அதனைச் சரிபார்ப்பார். இந்த விளக்கமும் இசை வடிவத்திலேயே இருக்கும். இது முடிந்ததும் மறுபடியும் "கொண்டாட்டம்" சொல்லப்படுகிறது. இந்த முறைப்படி பிரபந்தப் பாடல்கள் நாள்தோறும் அபிநயம் பிடிக்கப்படும். இது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் இணைந்த நிகழ்த்துகை. இதில் மற்றொரு விசேடமும் உள்ளது. ஆழ்வார் பாடல்களில் - குறிப்பாக திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் பாடல்களில் - பல அகத்துறை சார்ந்தவை. இதில் நாயக - நாயகி பாவம் அதிகம்.

இதில் ஒன்பதாம் நாள் அரையர் ஆட்டத்தில் "முத்துக்குறி" என்ற நிகழ்ச்சி இடம் பெறுகிறது. தலைவியின் தாய், தன் மகளுக்கு மன நோய் உள்ளது என்று கண்டு, அதனைப் போக்க குறி பார்க்கும் ஒரு கட்டுவிச்சியை (குறத்தி) அழைத்து குறி பார்க்கச் சொல்கிறாள். அவள் சோகிகளுக்குப் பதிலாக முத்துக்களை வைத்துக் குறி பார்க்கிறாள். இதற்கு "முத்துக்குறி" என்று பெயர். இந்த நிகழ்ச்சியில் ஒரே அரையர் தலைவி, தாய், கட்டுவிச்சி என்ற மூன்று நிலைகளையும் அபிநயம் பிடித்துக் காட்டுவார்.
இதேபோன்று, இராப் பத்து காலத்திலும் அரையர் ஆட்டம் இடம் பெறுகிறது. இராப் பத்து பத்தாம் நாள் அன்று நம்மாழ்வாருக்கு மோட்சமளிக்கும் நிகழ்ச்சியை செய்து காட்டுவர். இது கதையைத் தழுவியமையாமல் ஒரு பாடலுக்கான பொருள் விளக்கம் தரும் நிலையில் அமைகிறது.அப்பாடலுக்குள் உள்ள கதையை அது விளக்குவதாக அபிநயம் அமையப்பெற்றிருக்கும்.

இந்நிலையில் அரையர் ஒருவரே பல்வேறு பாத்திரங்களாக வேடப்புனைவு மாறுதல் இன்றி அவிநயிப்பர். காட்சி மாற்றங்களை, மாந்தர் கூற்று வழியே பாகுபடுத்துவர். பாசுரத்தின் ஒரு தொடருக்குப் பல நிலைகளில் அபிநயம் செய்யும் சிறப்பினை இக்கலையில் காணலாம். அபிநயித்துக் காண்பிக்கப்படும் நிலையில் இதுவும் நாடகத் தகுதியைப் பெறுகிறது. இந்திய நடிப்பினுடைய முக்கிய அம்சங்களை தன்னத்தே கொண்டதாக இதன் நடிப்பு முறை அமையப்பெற்றிருக்கும். தனி ஒருவரே பல்வேறு நிலைகளில் அபிநயிப்பது என்பது சிறப்பானதாகும்.

## 6. வித்தை பழகும் மரபு

இக்கலைக்குரிய பயிற்சிக் காலம் பன்னிரெண்டு ஆண்டுகள். தந்தைதான் இங்கு குரு. இந்த அரையர் ஆட்டத்தினை ஆண்கள் மட்டுமே ஆடுவதால்,ஆண் வாரிசு இல்லாதவர்கள் ஒரு ஆண்குழந்தையை சுவீகாரம் செய்துகொள்ளலாம். இது ஒரு குருகுல வாசமாகவே கற்பிக்கப்படுகின்றது. ஒருவர் இச்சேவையில் பங்கு கொள்ளவேண்டும் எனில் பல காலங்கள் கடுமையான பயிற்சிகளையும் விரதங்களை மேற்கொள்ளவேண்டும். தமிழ்மொழியிலும், ப்ரபந்தத்திலும் ஆழமான அறிவும், அனுபவமும் கைவரப் பெற்றவராக இருப்பதோடு, அபிநய அறிவும் ஆழமானதாகவும் செம்மையானதாகவும் பெற்ற பின்பே இச்சேவைக்கு, பெருமாள் முன் பிரசன்னமாக முடியும். பல ஹஸ்த முத்திரைகள் - பரதநாட்டியத்தில் குறிப்பிடப்படும் ஒற்றைக்கை, இரட்டைக்கை முத்திரைகளை போல் இருந்தாலும், தனித்தன்மை உடைய கஹந்தங்கள் இவ்வபிநயத்தில் பயன் படுத்தப்படுகின்றது. நாலாயிரம் பாடல்களை மனப்பாடம் செய்வது ஒரு பயிற்சி. சிறு வெண்கலத் தாளங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இதில் ஒரு தாளம் நம்மாழ்வார் என்றும், மற்றொரு தாளம் நாதமுனிகள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த தாள ஓசையுடன்தான் பாசுரங்கள் பாடப்படுகின்றன. இச்சேவையை செய்பவர்களை அரையர், அறையர், விண்ணப்பம் செய்வார், பாடுவான், இசைக்காரர், தம்பிரான்மார் என்றெல்லாம் அழைப்பார்கள். ஆழ்வார் பாசுரங்களை இசையுடன் பாடி அனுபவித்து அவற்றின் விளக்கங்களை அழகுறப் பேசி நடிக்கும் முத்தமிழ்க் கலையே அரையர் சேவையாகும்.

பாசுரத்தைப் பண்ணுடன் பாடுதல், பாசுரத்திற்கு அபிநயம் செய்தல், பாசுரத்திற்கு உரை கூறுதல் என்னும் முறையில் இக்கலை ஆழ்வார் பாசுரங்களுக்கு இயற்பா, இசைப்பா எனப் பகுப்போடு அமையாது, முத்தமிழின் மூன்றாம் கூறான நாடகத் தமிழையும் இணைத்துப் முத்தமிழ் வடிவம் கொடுத்துள்ள ஓதுவார்களைப் போல அரையர்களைப் பர்ப்போர் இல்லாது போனமையால் அரையர் குடும்பங்கள் நசிந்து போயின.

இன்று திருவரங்கம் அரங்கநாத சுவாமி கோயில், ஆழ்வார்திருநகரி ஆதிநாதன் கோயில் மற்றும் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் ஆகிய தமிழக வைணவக் கோயில்களிலும் தென்கர்நாடகாவில் உள்ள மேல்கோட்டை திருநாராயணபுரம் கோயிலில் மட்டுமே அரையர் சேவை வழக்கில் உள்ளது.

மார்கழி மாத பகல் பத்து மற்றும் இராப்பத்து உற்சவங்களில் அரையர் சேவை சிறப்பாக நடைபெறுகிறது. பாசுரத்தின் ஒரு தொடருக்குப் பல நிலைகளில் அபிநயம் செய்யும் சிறப்பினை இக்கலையில் காணலாம். வைணவக் கோயில்களில் விழாக் காலங்களின்போது இறைவன் நடுவே எழுந்தருள, அவனுக்கு முன்னே திவ்வியப் பிரபந்தமும் பின்னே வடமொழி வேதமும் பாராயணம் செய்யப்பட்டு வருதல் காணலாம். தமிழ் வேதமாகிய திவ்வியப் பிரபந்தம் அவனது இயல்பை (சொரூபம்) உணர்ந்து முன்செல்லுதல் தோன்ற முன்னே ஓதப்படுகிறது என்றும், வடமொழி வேதம் அவனை எட்டமாட்டாது நாடித் தொடர்ந்து செல்லுதற்கு அறிகுறியாக எம்பெருமானுக்குப் பின்னே ஓதப்படுகிறது என்றும் இதற்கு விளக்கம் கூறுவர். இதனால் திவ்வியப்பிரபந்தத்தின் பெருமை விளங்கும். இதனைக் கருதியே,

*பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற*
*பச்சைப் பசுங்கொண்டலே*

என்று பாடினார் குமரகுருபரர்.

அவருக்கு முன்னர் *படர்ந்து ஆரணம் முழங்கப்பஞ்சவர்க்குத் தூது நடந்தான்* என்று இளங்கோவடிகளும் பாடியிருத்தல் காணலாம். கம்பரும் தம் சடகோபரந்தாதியில்

*‘ஆழ்வார் பாசுரத்தின் ஓர் அடியையேனும்*
*கடந்து செல்ல எம்பெருமானால் இயலுமோ?’*

என்னும் பொருள்படப் பாடியிருத்தலும் இங்கு எடுத்துக் காட்டத்தக்கது. அரையர் ஆட்டம் எல்லா வைணவக் கோயில்களிலும் இருந்திருக்கவேண்டும். இருப்பினும், இது இன்று அருகி வருகிறது. நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாடல்களை இசையோடு பாடி, அபிநயம் பிடித்து விளக்கம் சொல்லும் ஆட்டம் இது. இதனை இயல், இசை, நாடகம் ஆகியன கலந்த ஆட்டம் என்று கூறுவர். ”அரையர்கள் பிரதிபலன் ஏதுமில்லாமல், அரங்கனுக்கு செய்யும் சேவையான அரையர் சேவை பகவத் கைங்கரியத்திற்கு ஒரு சிறந்த சான்றாகும். அரையர்கள் ஆழ்வார்களாகவே போற்றப் படுகிறார்கள்.

## துணை நூற் பட்டியல்

[1] வேங்கடராமன்.சு, அரையர் சேவை, தமிழ்ப்புத்தகாலாயம்,சென்னை, 1985

[2] அருணாசலம்.மு, தமிழ் இலக்கிய வரலாறு–பன்னிரண்டாம் நூற’றாண்டு -இரண்டாம் பாகம், திருச்சிற்றம்பலம், காந்தி வித்தயாலயம், 1973

[3] இராமநாதன். எஸ்,திவ்வியப்பிரபந்தப்பண் இசை, சென்னை கலைமகள் இசைக் கல்லூரி, 1969

[4] பெருமாள்.ஏ.என், தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979

## கட்டுரைகள்

[1] அரங்கராஜன்.இரா, அரையர் சேவை

[2] சேகர்.கி,முத்தமிழ்த்துறையில் முறைபோகிய உத்தம அரையர், (தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை நடததிய கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை)

[3] நுரசிம்ம ஐயங்கார்.எஸ்,‘ஸ்ரீ ரங்கம் வைகுண்ட ஏகாதசி உத்ஸவ வைபவம்’ ஸ்ரீ வைஜ்ணவ மாநாடு மலர், ஸ்ரீரங்கம்

[4] வேங்கடராமன், சு, வைணவம் வளர்த்த கலை (அரையர் செவை அறிமுகம்) தினமலர், 17.10.1978